**கெபிதிகொல்லாவ பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கெபிதிகொல்லாவ பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள், உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கெபிதிகொல்லாவ பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் உள்ளுராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளுராட்சி மன்றங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) வட மத்திய மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளரினால் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வழங்கப்பட்ட 2019\02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் புதிய கணக்கீட்டு முறைமையின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதால் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்ய முடியாதிருந்தது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காக மீண்டெழும் செலவினத்திற்காக அரசின் பெறுவனவுகள் ரூபா 14,537,817 ஆக இருந்த போதும் விரிவான வருமானக்கூற்றில் அது ரூபா 14,336,078 என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் ஆண்டின் இலாபம் ரூபா 201,739 ஆல் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன் | சுரியான மீண்டெழும் செலவின மானியங்கள் பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | 06 கணக்கீட்டு பதிவுகளின் பிரகாரம் மீளாய்வாண்டில் பரிமாற்றம் செய்யப்படாத கொடுக்கல் வாங்கல் களிலிருந்து கிடைத்த வருமானம் ரூபா 5,318,827 ஆக இருந்த போதும் விரிவான வருமானக் கூற்றில் அது ரூபா 5,325,377 என கணக்கீடு செய்யப்பட்டமையால் | ஏற்றுக் கொள்கின்றேன் | சரியான வருமானம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டின் இலாபம் ரூபா 6,550 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | மீளாய்வாண்டிற்காக கிடைத்த ரூபா 33,807,707 ஆன மூலதனச் செலவின மானியம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் காண்பிக்கப்படாமையால் உரித்து பெறுமதி அப்பெறுமானத்தினால் குறைவாக இருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன் | சபைக்கு கிடைக்கப்பெறும் மூலதனச் செலவின மானியம், கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட பற்றாக்குறை கணக்கு மீதி ரூபா 549,789,459 ஆக இருந்த போதும் அத்திகதியில் தயாரிக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் ரூபா 572,792,233 என கணக்கீடு செய்யப்பட்டமையால் பெறுமதி ரூபா 23,002,774 ஆல் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன் | உரித்து பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | நாட்குறிப்புக்களின் பிரகாரம் காலப்பகுதிக்குரிய சீராக்கங்களில் திரண்ட நிதியத்திற்கு ஏற்படும் வரவு தாக்கம் ரூபா 2,725,348 ஆக இருந்த போதும் தேறிய சொத்துக்கள் / உரிமை மாற்றங்கள் கூற்றில் அது ரூபா 8,274,774 ஆன செலவு தாக்கமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டமையால் திரண்ட நிதி ரூபா 11,000,122 ஆல் அதிகரித்திருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன் | திரண்ட நிதிக்கு ஏற்படும் தாக்கம் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | சபைக்குரியதல்லாத நிர்மாணத்திற்காக மீளாய்வாண்டின் போது சபையால் செலவிடப்பட்ட ரூபா 1,093,330 தொகை கட்டிடங்களின் கீழ் நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்தமையால் | ஏற்றுக் கொள்கின்றேன் | சபைக்குரிய கட்டிடங்கள் மாத்திரம் சபையின் நிலையான சொத்துக்களாக சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சபையின் சொத்துக்கள் அப் பெறுமானத்தினால் கூடுதலாக காண்பிக் கப்பட்டிருந்தது. | | |
| (எ) | நிலையான சொத்துக்களை அகற்றும் போது திரண்ட பெறுமானத்தேய்வு பெறுமதி அகற்றல் கணக்கிற்கு மாற்றப்படாமையால் நிலையான சொத்துக்களின் விற்பனைப் பெறுமதி இலாபம் ரூபா 30,000 ஆல் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது | ஏற்றுக் கொள்கின்றேன் | நிலையான சொத்துக்களை அகற்றும் போது திரண்ட பெறுமானத்தேய்வு பெறுமதி அகற்றல் கணக்கிற்கு மாற்றப்பட வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டின் போது 25 அபிவிருத்தி செயற் திட்டங்களின் கீழ் 35 மதகுகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 6,405,039 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் அது ரூபா 12,386,285 என நிலையான சொத்துக்களாக கணக்கீடு செய்தமையால் நிலையான சொத்துக்கள் ரூபா 5,981,246 ஆல் கூடுதலாக இருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன் | சரியான நிலையான சொத்துக்கள் பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சொத்துக்கள் பொறுப்புக்கள் கூற்றின் பிரகாரம் காசு மற்றும் காசுக்கு சமமான ரூபா 7,907,273 ஆக இருந்த போதும் காசுப்பாய்ச்சல் கூற்றில் ஆண்டின் தேறிய காசு அதிகரிப்பு மற்றும் ஆரம்ப காசு மீதியின் கூட்டுத்தொகை ரூபா 15,075,777 ஆக இருந்தது | ஏற்றுக் கொள்கின்றேன் | சரியான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஒ) | 2019 ஆம் ஆண்டிற்குரிய கிடைக்க வேண்டிய ரூபா 636,154 ஆன வாடகை வருமானமொன்று மீளாய்வாண்டிற்குரிய வருமானமொன்றாக கணக்கீடு செய்தமையால் மீளாய்வாண்டின் இலாபம் அப்பெறுமதியால் அதிகரித்திருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன் | முன்னைய ஆண்டிற்குரிய வருமானம் திரண்ட நிதிக்கு சீராக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஓ) | மீளாய்வாண்டில் செயற் படுத்தப்பட்டிருந்த சபிரிகமக் செயற்திட்டத்திற்குரிய கெபிதிகொல்லாவ பிரதேச செயலகத்திலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 119,778 ஆன நிர்வாக கட்டண வருமானம் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை | ஏற்றுக் கொள்கின்றேன் | மீளாய்வாண்டிற்குரிய பெற வேண்டிய வருமானம் கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஔ) | மீளாய்வாண்டிற்குரிய அறவிட வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றேன் | மீளாய்வாண்டிற்குரிய பெற வேண்டிய வருமானம் கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (க்) | சபையின் உத்தியோகத்தர்கள் தேர்தல்கள் கடமைக்கு சமூகமளித்தமைக்காக ஏற்பட்ட செலவுகளை மீள்நிரப்ப தேர்தல் அலுவலகத்திலிருந்து கிடைத்த ரூபா 37,870 தொகை மீளாய்வாண்டின் வருமானமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டமையால் மீளாய்வாண்டின் வருமானம் அப்பெறுமதியால் அதிகரித்திருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன் | தேர்தல்கள் செலவினம் மீளளிப்பிற்காக கிடைத்த பெறுவனவு சபையின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (க) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கன்பட்டோராக கணக்கீடு செய்யப்படாத 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 02 செயற்திட்டங்களுக்குரியதாக உள்ளூராட்சி மன்ற ஆணையாளரிடமிருந்து கிடைத்த ரூபா 770,342 தொகை மீளாய்வாண்டின் கடன்பட்டோர் பெறுவனவொன்றாக கணக்கீடு செய்யப்பட்ட மையால் நிர்மாணக் கடன்பட்டோர் மீதி அப் பெறுமதியால் அதிகரித்திருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன் | சரியான கடன்பட்டோர் பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்து மூலமான சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ரூபா 13,087,914 பெறுமதியான கணக்கு விடயமொன்றிற்குரிய கணக்காய்விற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | ஏற்றுக் கொள்கின்றேன் | காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்பட்டதாக உறுதிப்படுத்தி சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 34,692,161 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 688,371 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **(அ) வாடகை** | | |
| மீளாய்வாண்டிற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 915,884 ஆன வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டி ருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றேன். | நிலுவை வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| **(ஆ) அனுமதிப்பத்திரக் கட்டணம்** | | |
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 94,820 ஆன நிலுவை வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் மற்றும் 95 வியாபாரங்களுக்குரிய பெற | நிலுவை தொகை தொடர்பாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பேன். | குறித்த நிலுவைக் கட்டணங்களை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

வேண்டிய ரூபா 380,000 ஆன சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் அறவிடு வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் மக்களுக்கான பாதைகள் ஆகியவற்றை ஒழுங்குபடுத்துவதற்கும், நிர்வகிப்பதற்கும், மக்களின் நலன், வசதிகள், நலன்புரிகள் உள்ளிட்ட சபை நிறைவேற்ற வேண்டியிருந்த பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 செயற்பாட்டு வினைத்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 நவம்பர் 22 ஆந் திகதிய 2151 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நீரை பகிர்ந்தளிப்பதற்காக லீற்றரொன்றுக்கு ஒரு ரூபா வீதம் அறவிட வேண்டிய 8000 லீற்றர் இயலளவுடன் கூடிய பௌசரொன்று மீளாய்வாண்டில் 93 நாட்கள் நீர் விநியோகிப்பதற்குரிய பெறவேண்டிய ரூபா 564,000 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை | ஏற்றுக் கொள்கின்றேன். | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் நீர் வருமானத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2019 நவம்பர் 22 ஆந் திகதிய 2151 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் மீளாய்வாண்டில் சபைக்குச் சொந்தமான பெகோலோடர் இயந்திரம் 432.7 மீற்றர் மணித்தியாலம் ஓடியமைக்காக ரூபா 1,298,100 அறவிடப்பட வேண்டிய போதிலும் வாடகை வருமானமாக ரூபா 647,900 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன். | வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் வாடகை அடிப்படையில் ஓட்டத்தில் ஈடுபடுத்தியமைக்கான வருமானத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) சபையினால் பயன்படுத்தப்படுகின்ற ரூபா 361,725,000 பெறுமதிக்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ள 286.5 ஏக்கர் காணிக்காக உரித்து சான்றிதழ் மற்றும் திட்ட வரைபடம் சமர்ப்பிக்கப்படவில்லை | ஏற்றுக் கொள்கின்றேன். | இக்காணி சபைக்கு பொறுப்பேற்கப்பட்டு உரித்துச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

**3.2 செயலற்ற அல்லது குறைபயன்பாடுடை ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 45,000,000 செலவில் கெபிதிகொல்லாவ பஸ் நிலையத் தொகுதியில் 46 கடைகள் நிர்மாணிக்கப் பட்டிருந்த போதும் உறுப்பினர் ஒருவரால் திறந்த கேள்வி கோரலுக்கு எதிர்ப்பு தெரிவித்தமையால் 19 கடைகள் 2022 பெப்வரி 28 ஆந் திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டன. | ஏற்றுக் கொள்கின்றேன். | இக்கடைகளை வாடகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |